**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**P204 இதழியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. முதன் முதலில் அச்சான தமிழ்நூல் எது?
2. தமிழில் வெளிவரும் புலனாய்வு நூல்களில் ஒன்றினைக் கூறுக.
3. சுதந்திர நாட்டின் மிகப் பெரிய காவலாளி எது?
4. பீட் என்பதைத் தமிழில் எச்சொல்லால் குறிப்பர்?
5. செய்தித் தாளின் அச்சாணியாகக் கருதப்படுபவர் யார்?
6. செய்தியாளர்களின் பணிகளில் மிகவும் சுவையானது எது?
7. 'அவசரம் அவசரமாக நடைபெறும் வரலாறு' என்பது எது?
8. இதழ் நடத்துபவரின் எழுத்தாக அமைவது எது?
9. கற்றல், கேட்டலை விட மிகவும் பயன்தருவது எது?

10. துணுக்கு என்ற சொல்லின் பொருள் யாது?
11. காந்தியடிகள் நடத்திய இதழின் பெயர் என்ன?
12. செம்மையாக்கத்தை ஆங்கிலத்தில் எவ்வாறு கூறுவர்?
13. தமிழ்நாட்டில் அச்சுக்கூடம் முதலில் நிறுவப்பட்ட இடம் எது?
14. அச்சுக் கோத்தவற்றைப் படியெடுத்து, அதனைச் சரிபார்ப்பவர் யார்?
15. டெலி டைப் செட்டரின் வளர்ந்த வடிவம் எது?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. இதழ்களை எங்ஙனம் வகைப்படுத்தலாம்?
2. இதழ்களின் நடத்தை விதிகள் யாவை?
3. நேரடிச் செய்தி, விளக்கச் செய்தி – விளக்குக.
4. செய்தி மூலங்கள் என்றால் என்ன?
5. செய்தித் தாளின் பக்க அமைப்பு என்றால் என்ன?
6. தலையங்கம் என்றால் என்ன?
7. விழாக்கால விளம்பரங்கள் என்றால் என்ன?
8. மெய்ப்புத் திருத்துபவர் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) இந்திய இதழியல் வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இந்திய விடுதலையில் இதழ்களின் பங்களிப்பைக் கூறுக.

2. (அ) செய்தியாளருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்தி நிறுவனங்கள் என்றால் என்ன என்பதையும் அவற்றின் பணிகள் பற்றியும் விளக்கமாக எழுதுக.

3. (அ) செம்மையாக்கம் என்றால் என்ன? செய்தியைச் செம்மையாக்கம் செய்யும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

(அல்லது)

(ஆ) இதழ்களில் வெளிவரும் நிழற்படங்களின் வகைகளைக் கூறி, அவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.